إِنَّ الدِّينَ عِندَ اللَّهِ الْإِسْلَامُ　　　　لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ مُحَمَّدٌ رَسُولُ اللّٰهِ

# Friday Sermon

*30 November 2018*
*(21 Rabi'ul Awwal 1440 AH)*

In Kottar, Tamil Nadu - India

# "THE REVIVAL OF ISLAM"
# இஸ்லாமிய மார்க்கத்தின் மறுமலர்ச்சி

---



**(Tamil version - தமிழ் பதிப்பு)**

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவ்வுதும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

**"நீங்கள் எல்லோரும் அதிலிருந்து வெளியேறுங்கள். என்னிடமிருந்து உங்களிடம் ஏதாவது நேர்வழி வருமாயின் எனது நேர்வழியினைப் பின்பற்றி நடப்பவர்களுக்கு (எதிர்காலம் பற்றிய) எந்த அச்சமும் இருக்காது. (இறந்த**

**காலம் பற்றி) அவர்கள் துயரமும் அடைய மாட்டார்கள் என்று நாம் சொன்னோம". (2:39)**

அல்லாஹ்வின் அருளால் இந்தியாவில் தமிழ்நாட்டின் பகுதியாகிய கேட்டாரில் உள்ள என் தோழர்களின் முன்னிலையில் நின்று "இஸ்லாமிய மார்க்கத்தின் மறுமலர்ச்சி" என்ற தலைப்பினை அடிப்படையாக்கி பேசுவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். திருக்குர்-ஆனில் அல்லாஹ் கூறுகிறான், என்னிடமிருந்துள்ள நேர்வழி வருமாயின் அதை பின்பற்றி நடப்பவர்கள் அச்சம் மற்றும் துயரினை அடையமாட்டார்கள்.

வானங்களையும், பூமியையும், மனிதர்களையும் படைத்ததிலிருந்து ஒவ்வொரு கால கட்டங்களிலும் மேன்மேலும் மனிதர்களுக்கு நல் வழிகாட்டிட அல்லாஹ் தனது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளை ரூஹுல்குதூசுடன் அனுப்பி வைக்கிறான். எதற்கு இறைவன் தனது பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து இவ்வாறு அனுப்பிவைக்கிறான்? ஏனெனில் காலகட்டங்கள் முன்செல்லும் பொழுது சாத்தானும் அவனது சேனையும் நேர்வழியிலிருந்து மனிதனை வழிதவறச் செய்கின்றனர் அல்லது நெறியான பாதையிலிருந்து மனிதனை தடம் மாற்றிக் கொள்ள முயற்சிக்கின்றனர். அந்நிலையில் மக்களை இரட்சிப்பதற்கும், ஆன்மீக மரணத்திலிருந்து அவர்களுக்கு புத்துயிர் அளிப்பதற்குமாக தனது பிரத்யேகமான நபர்களை அதாவது தூதர்களை அல்லாஹ் அனுப்புகிறான். அருளுக்குரிய அத்தகைய தூதர்கள் இறை வெளிப்பாடு மற்றும் வழித்துணையுடன் வருகை தருகின்றனர். சாத்தானின் பொறிகளில் விழாமல் இருப்பதற்கான எச்சரிக்கைகளை அவர்கள் மக்களுக்கு விடுக்கின்றனர். சரியான பாதையினை மக்களுக்கு அவர்கள் காட்டுகின்றனர்.

இந்த சரியான பாதை என்பது முதன்மையாக **"தௌஹீத்"**(Towheed) ஆகும். அது ஏக இறை நம்பிக்கையும் இறையச்சமும் ஆகிறது. ஏக இறை நம்பிக்கையில் அவர்கள் உறுதியுடன் நிலைக் கொண்டால், இறையச்சத்தைக் கொண்டவர்களாகயிருந்தால் சாத்தானுக்கும் அவனது கவர்ச்சிகளுக்கும் அவர்களுக்குள் எந்த விளைவையும் ஏற்படுத்த முடியாது.

மக்களுக்கு மார்க்க வழிகாட்டுதலுக்காக தனது பிரதிநிதிகளை உலகில் அனுப்பி வைக்கின்றான் என்பது அல்லாஹ்வின் திரு சுன்னத்தாகிறது. அது மூலம் அவன் மக்களை சீர்திருத்தி கொள்வதோடு இறைவனை மட்டுமே வணங்க வேண்டும் என அவர்களை கற்பிக்கின்றான். அம்மக்களுக்கு நெறியான பாதையினை காட்டுகின்றான். அதே நேரத்தில் சாத்தானும் அவனது படையினரும் அனைத்து வாயிலிலும் தோன்றி அல்லாஹ்வின் தூதர் மற்றும் சீர்திருத்தவாளர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதற்காக மனித மனதிலும் ஆத்மாவிலும் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சித்து கொண்டிருப்பார்கள். சாத்தானின் அத்தகைய

முயற்சிகளின் இலக்கு என்பது முழுமை பெற்ற அல்லாஹ்வின் ஆற்றலையும், இறைவழியையும், இறை தூதர்களையும் ஏளனம் செய்தலாகும்.

தூய்மையான இஸ்லாமிய மார்க்கத்தை சார்ந்த நம்பிக்கையாளர்கள் என்ற நிலையில் நாம் அனைவருக்கும் தெரியும் அதாவது இரண்டு வகையிலான இறை தூதர்கள் மற்றும் நபிமார்கள் உலகில் தோன்றியிருந்தனர். ஒன்று ஷரி-அத்துடன் தோன்றும் நபிமார்கள். இரண்டு ஷரி-அத்தில்லாமல் அதாவது ஷரி-அத்தை மெய்ப்பிக்க தோன்றும் நபிமார்கள்.

ஷரி-அத்துடன் தோன்றுகின்றனர் என்பதன் பொருள் அதாவது அல்லாஹ்வின் புறமிருந்து தோன்றுகின்ற சில நபிமார்கள் மூலம் அல்லாஹ் அம்மக்களுக்கு பின்பற்றுவதற்கான சட்ட திட்டங்களை வழங்குகின்றான். அதனை அம்மக்கள் பின்பற்ற வேண்டும். இத்தகைய சட்டங்களை அம்மக்கள் எழுதி பதிவு செய்கின்றனர். அதற்கு அவர்கள் கட்டுப்பட்டு வாழலாம். இத்தகைய ஷரி அத்துகளில் திருக்குர் - ஆன் முழுமை பெற்றதாகவும் என்றென்றும் நிலை நிற்பதாகவும் இருக்கிறது. இந்த ஷரி-அத்தானது பரிபூரணமாக இறைவெளிபாடுகளைக் கொண்டு அமைந்திருக்கிறது. இது நம் காலத்திற்கு மட்டுமன்றி இறுதி காலம் வரையிலும் முழுமைபெற்ற நிலையில்தான் இருக்கும். அல்ஹம்துலில்லாஹ். கடந்த கால அனைத்து நூல்களுக்கும் மேலான இறை சட்ட திட்டங்களுடன் திருக்குர்-ஆன் அமைந்திருக்கிறது. உதாரணமாக தாவூது நபி(அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட சபூறைவிடவும், மூஸா நபி(அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட தௌராத்தைவிடவும், ஈசா நபி(அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட இன்சீலைவிடவும் திருக்குர்-ஆன் முழுமை பெற்றதாக இருக்கின்றது என்ற இறைவசனத்தை திருக்குர்-ஆனில் காணலாம்.

இந்த முழுமை பெற்ற ஷரி-அத்துடன் அல்லாஹ்வின் பரிபூரண மனிதனும் நபியுமாகிய ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தோன்றினார். இஸ்லாமின் சாராம்சம் எங்கு நிலை நிற்கிறது என்றால் சுத்தம் மற்றும் நேர்மையினை கொண்ட ஒரு இதயத்திலாகும். அவ்விதயமானது அல்லாஹ்வின் அன்பு மற்றும் நெருக்கத்தினை அடைய விரும்புகின்றவாறிருக்கும். நமது தூதர் அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறுதிகாலம் வரையில் அதே அந்தஸ்துடன் நிலை நிற்பார்.

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இஸ்லாமின் முதன்மையான எழுச்சியிலிருந்து இஸ்லாம் அதன் வரலாற்றில் பல எழுச்சியையும் வீழ்ச்சியையும் சந்தித்தது. **“எப்போதெல்லாம் இஸ்லாமின் புனித தன்மைக்கு அபாயம் நேர்ந்ததோ அப்போதெல்லாம் அல்லாஹ் சீர்திருத்தவாளர்கள், நம்பிக்கைக்கு புத்துயிர் அளிப்பவர்கள் மற்றும் கலீ∴பாக்களை அனுப்பி வைத்திருந்தான். கடந்த நூற்றாண்டில்**

**வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹமது (அலை) அவர்கள் அனுப்பபட்டிருந்தார் என்பது இத்தருணத்தில் குறிப்பிடத்தக்கது. அல்லாஹ்வின் இச்செயலானது இஸ்லாமிற்கு ஒரு நவீன சுவாசத்தை அளிப்பதற்கும, அல்லாஹ்வின் ஆதரவு தற்போது இல்லாத மற்றனைத்து நம்பிக்கையின் மேல் இஸ்லாமிற்கு வெற்றி அளிப்பதற்கும் ஆகும்.**

**அவ்வாறே இந்த சகாப்தத்தில் அல்லாஹ் தனது புறமிருந்து ஒருவரை அனுப்பி இவ்வுலகினை ஆசீர்வதித்திருக்கின்றான். இந்த எளியவனை அல்லாஹ் தனது கலீஃ.பாவாகவும், இந்நூற்றாண்டின் மஸீஹாகவும் அனுப்பியுள்ளான். அவன் விரும்பும் மற்ற பல்வேறு பதவி மற்றும் பெயரினை எனக்கு வழங்கியிருக்கின்றான். மேன்மேலும் இஸ்லாமிற்கு ஆற்றலை அளிப்பதற்க்கும், முஸ்லீம்களுக்கும் பிற இன மக்களுக்கும் முன் இஸ்லாமின் உண்மையினை எடுத்துரைப்பதற்கும், ஏனைய அனைத்து மதங்களுக்கும் மேல் அதன் உண்மைத் தன்மையையும் மேலாதிக்கத்தையையும் நிரூபிப்பதற்குமாக நான் அனுப்பபட்டிருக்கின்றேன்.”**

நிச்சயமாக அல்லாஹ்வின் பார்வையில் உண்மையான மார்க்கம் இஸ்லாம் ஆகிறது. அல்லாஹ்வின் அனைத்து நபிமார்களும் முஸ்லீம்களாவார்கள். அவர்கள்யாவும் அல்லாஹ்வின் விருப்பத்திற்கு ஏற்றவாறு அனைத்தும் சமர்பிக்கின்றனர். அவர்கள் ஏக இறைவன் மற்றும் ஏக இறைவணக்கம் ஆகியவைப் பற்றி மட்டுமே கற்பித்தனர். திருதூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் வருகையுடன் அல்லாஹ் தனது மார்க்கத்திற்கு ஒரு பெயரினை சூட்ட தீர்மானித்தான். அக்காரணத்தால்தான் இம்மார்க்கத்திற்கு இஸ்லாம் என பெயர் வந்தது.

**எனது அன்புக்குரிய சகோதரர்களே! நீங்கள் அனைவரும் நினைவில் கொள்ள வேண்டும். ஆன்மீக துறையில் அபாயங்கள் எப்போதும் வரலாம். அதனால் மனிதனுக்கு நெறியான பாதையினை காட்டுவதற்கு அல்லாஹ்வின் புறமிருந்து ஏராளமான தூதர்கள் தோன்றுவார்கள். ஆகவே மேன்மேலும் நன்மையினை பெற உங்கள் இதயம் தாகம் கொண்டவாறு இருக்க வேண்டும்.**

அல்லாஹ்வின் மீதும், இஸ்லாமின் அனைத்து கட்டளைகள் மீதும், காலகட்டத்தின் தூதர் மீதும் நம்பிக்கை கொள்கிறேன் என ஒருவர் கூறுவதில் மட்டும் என்ன பயன்? மேன்மேலும் நன்மையினை பெற எந்த முயற்சியும் செய்யாமல் இருந்தால், ஒரு நல்ல முஸ்லீமாக மாறுவதற்கான வழிமுறைகளை வகுக்காமல் இருந்தால் அதில் எந்த பயனும் இல்லை.

கலீஃ.பத்துல்லாஹ்வின் மீது நான் நம்பிக்கைக் கொள்கிறேன் என ஒருவருக்கு மிக எளிதில் கூற முடியும். ஆனால் **நீங்கள் நினைவில் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையினை சிறப்புமிக்கதாக ஆக்குவதற்கே நான் தோன்றியிருக்கிறேன். அல்லாஹ்வுக்காக நீங்கள் நேர்மையான**

வாழ்க்கையை அமையுங்கள். நிகரற்றவனாக திகழும் இறைவனின் சன்னிதியில் உங்களை அர்ப்பணித்து விடுங்கள். நீங்கள் உங்களையே சீரமைத்துக் கொள்ள முயற்சிக்கும் போதுதான் இஸ்லாமிய மார்க்கத்தின் மறுமலர்ச்சி ஆரம்பம் கொள்கிறது. நம் சொல்லும் செயலும் ஒன்றிணைந்து செல்ல வேண்டும். எனது அன்புக்குரியவர்களே! இந்த உள் சீர்திருத்தமே நமது மூலதனம். இஸ்லாமின் நாளைய வெற்றிக்கு இது மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்பதை நீங்கள் பகுத்தறிந்திட வேண்டும். ஆகையால் எனது தாழ்மையான அறிவுரை இதுவாகும். இன்றைய தினத்திலிருந்து உங்களை சீரமைக்ககும் முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ளுங்கள். அவ்வாறேயானல் நிச்சயமாக நம் ஒவ்வொருவருக்கும் ஒரு பொன்னான நாளையே காண முடியும். அல்லாஹ்வின் மீதான நேர்மையான பக்தி மூலமும் நம்பிக்கை மூலமும் இஸ்லாமிய சூரியன் உதிக்கட்டும்.

இன்ஷா அல்லாஹ்! ஆமீன்.

---

**Translated by:**
*Azim Ahmad (Naib Amir)*
Ph: 7339689239

## ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
*Amir Kerala South Zone, India*
**Kerala Contact No: 9447001832**

**SIRAJ DEEN SAHIB**
*Amir Tamil Nadu State, India*
**Tamil Nadu Contact No: 7502272774**

**PUBLISHED BY:**
JAMAAT-UL-SAHIH-AL-ISLAM
KALIYAKKAVILAI BRANCH
(TAMILNADU AND KERALA BORDER)
Ph No: 9789180817, 9171977109